
அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2022 (2023)

# 46 - இந்து நாகரிகம்

## புள்ளியிடும் திட்டம்



திருக்கேதீஸ்வரத் திருத்தலம்

இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
# தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
# கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை – 2022 (2023)

## 46 - இந்துநாகரிகம் II

## புள்ளியிடும் திட்டம்

பரீட்சார்த்திகள் இவ்வினாத்தாளில் உள்ள பகுதி I இலிருந்து எவையேனும் இரண்டு வினாக்களையும், பகுதி II இலிருந்து எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும்.

**பகுதி I**

02 வினாக்களுக்கும் - $02 \times 20 = 40$ புள்ளிகள்

**பகுதி II**

03 வினாக்களுக்கும் - $03 \times 20 = 60$ புள்ளிகள்

**மொத்தம்**

05 வினாக்களுக்கும் - $40 + 60 = 100$ புள்ளிகள்

**இறுதிப் புள்ளி கணக்கிடல்**

| | | |
|---|---|---|
| பத்திரம் I க்கு | - | 50 புள்ளிகள் |
| பத்திரம் II க்கு | - | 100 புள்ளிகள் |

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் □ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ..................................................................... ✓ △ 4/5
.....................................................................
.....................................................................

(ii) ..................................................................... ✓ △ 3/5
.....................................................................
.....................................................................

(iii) ..................................................................... ✓ △ 3/5
.....................................................................
.....................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை ○ அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும்.

ooo

# இந்து நாகரிகம்
## வினாத்தாள் I
## வினாத்தாளின் குறிக்கோள் பற்றிய அறிமுகம்

- முதலாம் வினாத்தாளின் குறிக்கோள் இந்து நாகரிகப் பாடத்திட்டம் தொடர்பான அடிப்படை அறிவை மாணவர்கள் அடைந்துள்ளனரா? என்பதைப் பரீட்சித்துப் பார்த்தலும் இதன் மூலம் மாணவர்களின் நினைவாற்றலை அளவிடுதலுமாகும்.

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022(2023)

හින්දු ශිෂ්ටාචාරය I
இந்து நாகரிகம் I
Hindu Civilization I

**46 T I**

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**அறிவுறுத்தல்கள் :**

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
* **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** இந்துப் பண்பாட்டில் இசைமரபு வளம்பெற முன்னோடியாக விளங்கிய சிறப்பிற்குரிய நூல்
(1) நாட்டிய சாஸ்திரம் (2) இராமாயணம் (3) சாம வேதம்
(4) யசுர் வேதம் (5) சுக்கிர நீதி

**2.** 'பண்பாடு' என்ற பதத்திற்குப் பழந்தமிழ் இலக்கியங்களில் குறிக்கப்படும் சொல்
(1) தத்துவம் (2) மரபு (3) சால்பு
(4) கலை ஒழுக்கம் (5) தர்மம்

**3.** வேதங்களின் வரிசையில் பிராமணங்கள் என்ற இலக்கியம் சிறப்பாகக் கூறுவது
(1) யோகக் கலை பற்றியதாகும்.
(2) யாகக் கிரியைகளுக்குரிய விதிகள் பற்றியதாகும்.
(3) ஆன்மா பற்றியதாகும்.
(4) திருக்கோயில் மரபு பற்றியதாகும்.
(5) விக்கிரகக் கலை பற்றியதாகும்.

**4.** நடராச வடிவம் அரச சின்னமாக விளங்கிய காலம்
(1) சங்கமருவிய காலம் (2) பல்லவர் காலம் (3) சோழர் காலம்
(4) நாயக்கர் காலம் (5) பாண்டியர் காலம்

**5.** பல்லவர் காலத்தில் 'பெரிய கற்றளி' எனச் சிறப்படைந்த கோயில்
(1) முத்தீஸ்வரர் கோயில்
(2) மதங்கேஸ்வரர் கோயில்
(3) திருத்தணி வீரட்டானேசுவரர் கோயில்
(4) காஞ்சி கைலாசநாதர் கோயில்
(5) தர்மராஜ ரதம்

**6.** "தூய்மையான இறைவனைத் தூயபாடல்களால் போற்றுவோமாக" என்ற வழிபாட்டு முறையைக் கூறும் நூல்
(1) சாம வேதம் (2) பிராமணம் (3) இருக்கு வேதம்
(4) ஆரணியகம் (5) வேதாங்கம்

**7.** சிவாலயங்களையும் சிவனடியார்களையும் சிவனெனக் கொண்டு வழிபடுபவர்கள்
(1) தமோயோக்கியர்கள் (2) ஞானிகள் (3) ரிஷிகள்
(4) பெத்தர்கள் (5) சீவன் முத்தர்கள்

8. 'ஸ்மிருதி' இலக்கியம் என்ற வகையில் ஸ்மிருதி என்ற சொல் குறித்து நிற்பது
(1) கேட்கப்பட்டது
(2) உபதேசிக்கப்பட்டது
(3) தெளிவுடன் செய்யப்பட்டது
(4) தியானத்தில் உருவாக்கப்பட்டது
(5) நினைத்துச் செய்யப்பட்டது

9. அடியார்கள் இறைவனைத் தலைவனாகவும் தம்மைத் தலைவியாகவும் கொண்டு பாடிய பாடல்களில் வெளிப்படும் பாவம்
(1) தாஸ்யம் (2) மதுரம் (3) வாத்சல்யம்
(4) சாந்தம் (5) காந்தம்

10. இருக்கு வேதத்தில் மனிதர்களின் ஒழுக்கத்தைக் கண்காணிக்கும் தெய்வம்
(1) பர்ஜன்யன் (2) உஷை (3) வருணன்
(4) மருத்துக்கள் (5) அக்கினி

11. இலங்கையின் திருக்கோயில் வரலாற்றில் வானவன் மாதேவீச்சரம் என்ற கோயில் எழுந்த காலம்
(1) அனுராதபுரக் காலம் (2) பொலநறுவைக் காலம் (3) ஆரியச் சக்கரவர்த்திகள் காலம்
(4) ஒல்லாந்தர் காலம் (5) ஆங்கிலேயர் காலம்

12. இல்வாழ்க்கை நிலையில் அறத்தின் பாற்பட்ட பூதயக்ஞம் என்பது
(1) பசு, பறவைகள், நாய் ஆகிய உயிரினங்களுக்கு உணவு கொடுத்தலாகும்.
(2) ஏழைகளுக்கு அன்னதானம் வழங்குதலாகும்.
(3) ஒருவன் உண்ணும் சகல உணவுப் பொருட்களையும் இஷ்ட தெய்வத்திற்கு நிவேதித்து உண்ணலாகும்.
(4) மாதா பிதாவுக்குரிய கடமைகளை ஆற்றுவதாகும்.
(5) வேத அத்தியயனம் மற்றும் வேதத்தை உபதேசித்தலாகும்.

13. மெய்கண்ட சாத்திரங்களில் நான்கு வெண்பாக்களால் ஆன மிகச் சிறிய நூல்
(1) கொடிக்கவி (2) நெஞ்சுவிடுதூது (3) உண்மைநெறி விளக்கம்
(4) போற்றிப் பஃறொடை (5) வினாவெண்பா

14. பிரம்ம சூத்திரத்திற்கு வைஷ்ணவ தத்துவ நோக்கில் இராமானுஜர் எழுதிய விளக்கவுரை
(1) வேதாந்த சாரம் (2) ஸ்ரீபாஷ்யம் (3) நித்திய கிரந்தம்
(4) வேதாந்த சங்கிரகம் (5) கத்தியத் திரயம்

15. உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும்போதே அடையப் பெறும் முத்தியாவது
(1) சாலோக முத்தி (2) விதேக முத்தி (3) பதமுத்தி
(4) சீவன் முத்தி (5) பரமுத்தி

16. மெய்கண்ட தேவருடைய முதன்மைச் சீடராக விளங்கியவர்
(1) உமாபதி சிவாச்சாரியார்
(2) அருணந்தி சிவாச்சாரியார்
(3) மறைஞான சம்பந்தர்
(4) திருக்கடவூர் உய்யவந்த தேவர்
(5) மனவாசகங்கடந்த தேவர்

17. பெண்ணின் கருப்பையில் இருந்து செடி ஒன்று முளைப்பது போன்று பொறிக்கப்பட்டுள்ள முத்திரை
(1) சிந்துவெளி காலத்திற்குரியது
(2) வேதகாலத்திற்குரியது
(3) சங்ககாலத்திற்குரியது
(4) குப்தர் காலத்திற்குரியது
(5) நாயக்கர் காலத்திற்குரியது

**18.** "கடமையைச் செய் ; பலனை எதிர்பாராதே" என இந்துக்களுக்கு அறிவுரை வழங்கும் நூல்
(1) அர்த்தசாத்திரம் (2) கைவல்யநவநீதம் (3) சுக்கிரநீதி
(4) பகவத்கீதை (5) மானசாரம்

**19.** தமிழகத்துத் திருக்கோயில்களில் ஆகாயத் தலமாய் போற்றி வழிபடப்படும் திருக்கோயில்
(1) திருக்காளத்தி (2) திருக்கடவூர் (3) சிதம்பரம்
(4) திருவண்ணாமலை (5) திருவானைக்கா

**20.** சோழர்காலத் திருக்கோயில்களின் வரிசையில் 'தஞ்சைக்கோயிலின் மறுபதிப்பு' எனப் போற்றப்படும் திருக்கோயில்
(1) கங்கை கொண்ட சோழேஸ்வரம்
(2) ஐராவதேஸ்வரம்
(3) திரிபுவனேஸ்வரம்
(4) சிதம்பரம்
(5) விஜயாலய சோழேஸ்வரம்

**21.** சைவ சித்தாந்த மரபில் ஆணவத்திற்குக் குறிப்பிடப்படும் எண்வகைக் குணங்களில் 'எப்பொழுதும் துக்கப்படுதல்' என்பதைச் சுட்டும் குணம்
(1) குரோதம் (2) கற்பம் (3) விசித்திரம்
(4) அஞர் (5) விகற்பம்

**22.** "தர்மம் பற்றிய விதிகள் தெய்வீகமானவை" எனச் சிறப்பித்துக் கூறுவது
(1) இராமாயணம் (2) மனுஸ்மிருதி (3) திருக்குறள்
(4) பிரமசூத்திரம் (5) கடோபநிடதம்

**23.** இசைத்தமிழ் ஆராய்ச்சியில் ஈடுபாடு கொண்டு யாழ்நூலை இயற்றியவர்
(1) சுவாமி விவேகானந்தர்
(2) காசிவாசி செந்திநாதையர்
(3) பண்டிதமணி கணபதிப்பிள்ளை
(4) சேர். பொன். இராமநாதன்
(5) சுவாமி விபுலாநந்தர்

**24.** சோழர் காலத்தில் வழங்கப்பட்ட 'வாச்சியமாராயன்' என்ற பட்டத்திற்குரியவர்
(1) சிவாச்சாரியார் (2) சிற்பக்கலைஞன் (3) ஸ்தபதி
(4) இசைக்கலைஞன் (5) ஆலய பரிபாலகர்

**25.** சைவசமய மரபில் தோத்திரமாகவும் சாத்திரமாகவும் போற்றப்படும் நூல்
(1) சிவஞானபோதம் (2) காரணாகமம் (3) திருவருட்பயன்
(4) சிவப்பிரகாசம் (5) திருமந்திரம்

**26.** "வருணன் மேய பெருமணல் உலகமும்....." என்ற வரிகள் மூலம் வருணனைப் போற்றும் சங்க நூல்
(1) அகநானூறு (2) பரிபாடல் (3) திருமுருகாற்றுப்படை
(4) தொல்காப்பியம் (5) பதிற்றுப்பத்து

**27.** இற்றைக் காலத்தில் இந்து நாகரிகம் உலகளாவிய நிலையில் பரவ உதவி வருவது
(1) பொதுக் கூட்டம்
(2) கல்வெட்டுக்கள்
(3) ஊடக சாதனங்களின் பங்களிப்பு
(4) குருகுலங்களில் இடம்பெறும் கல்வி மரபு
(5) பொது விவாதம்

28. "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்...." என இறைவனைக் குறித்துப் பதிகம் பாடி சைவபக்தி இயக்கத்தை வளப்படுத்தியவர்
(1) சுந்தரர் (2) காரைக்காலம்மையார் (3) சம்பந்தர்
(4) அப்பர் (5) திருமூலர்

29. பல்லவர் காலத்தில் 'சிற்பக்கலைக் களஞ்சியம்' எனப் போற்றப்பட்ட மலைதளி
(1) வீம ரதம் (2) கொற்றவை ரதம் (3) சகாதேவ ரதம்
(4) தர்மராஜ ரதம் (5) அர்ச்சுன ரதம்

30. திருக்கோணேச்சரத் திருத்தலத்தில் இறைவனோடு எழுந்தருளியுள்ள அம்பிகையின் திருநாமம்
(1) பார்வதி (2) சிவகாமி (3) மாதுமையாள்
(4) வடிவாம்பிகை (5) கௌரி அம்பாள்

31. புராணம் எனும் சொல் உணர்த்தி நிற்கும் சரியான பொருள்
(1) காதால் கேட்கப்பட்டது என்பதாகும்.
(2) பழமை வாய்ந்தது என்பதாகும்.
(3) தலைமுறை தலைமுறையாக கையளிக்கப்பட்டது என்பதாகும்.
(4) வார்த்தைகளால் வர்ணிக்கப்பட முடியாதது என்பதாகும்.
(5) ஞானிகளால் வெளிப்படுத்தப்பட்டது என்பதாகும்.

32. புராதன இந்துக் கல்விப் பாரம்பரியத்தில் 'பரவித்யா' எனப்படுவது
(1) உலகியல் சார்ந்தது (2) தொழில்முறை சார்ந்தது (3) அறிவியல் சார்ந்தது
(4) அரசியல் சார்ந்தது (5) ஆன்மிக ஈடேற்றம் சார்ந்தது

33. "முத்தியடைந்த நிலையிலும் ஆன்மாக்களுக்கிடையில் வேறுபாடு உண்டு" எனக்கூறிய தத்துவவாதி
(1) இராமானுஜர் (2) மத்துவர் (3) கோவிந்தர்
(4) கௌடபாதர் (5) பாதராயணர்

34. ஔவையாரின் வரலாற்றைக்கூறும் நூல்களுள் உள்ளடங்காத நூல்
(1) விநோதரச மஞ்சரி (2) பன்னிருபுலவர் சரித்திரம் (3) ஆத்திசூடி
(4) பாவலர் சரித்திர தீபகம் (5) கபிலரகவல்

35. மரபுவழி ஊடக வகையுள் அடங்குவது
(1) வானொலி (2) விளம்பரப்பலகை (3) முரசு
(4) ஒலிநாடா (5) தொலைபேசி

36. 'கல்வியிற் கரையிலாத காஞ்சிமாநகர்' எனப் பாடியவர்
(1) திருமூலர் (2) திருநாவுக்கரசர் (3) திருஞான சம்பந்தர்
(4) திருமாளிகைத் தேவர் (5) திருப்பாணாழ்வார்

37. 'சல்லியக் கிரியை' எனச் சுட்டப்படுவது
(1) பூர்வக்கிரியை (2) குடமுழுக்கு (3) சத்திர சிகிச்சை
(4) நடனவகை (5) மகோற்சவம்

38. "அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்" என்ற கூற்று இடம்பெறும் நூல்
(1) திருக்குறள் (2) சிலப்பதிகாரம் (3) அர்த்தசாஸ்திரம்
(4) பகவத்கீதை (5) பெரிய புராணம்

39. வட இந்திய வைணவப் பக்தி நெறியாளராக விளங்கியவர்
(1) ஆண்டாள் (2) இராமானந்தர் (3) இராமலிங்க வள்ளலார்
(4) அருணாசல தேசிகர் (5) நிவேதிதை

**40.** பின்வருவனவற்றுள் பல்லவர்கால சைவசமய நிலையுடன் தொடர்புபடாதது
(1) நந்திச் சின்னம்
(2) கட்டுவாங்கக் கொடி
(3) வைகுந்தப் பெருமாள் கோயில்
(4) க்ஷேத்திர வெண்பா
(5) காஞ்சி கைலாசநாதர் கோயில்

● **41** தொடக்கம் **45** வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுகளை வாசித்து, அவற்றுக்குப் பொருத்தமானவற்றை பின்வரும் அட்டவணையின் **I, II, III, IV** ஆகிய நிரல்களிலிருந்து தெரிவுசெய்க.

| I | II | III | IV |
|---|---|---|---|
| A<br>திருக்குறள் | F<br>ராஜசாசனம் | K<br>விநயபத்திரிகா | P<br>தட்சசீலம் |
| B<br>நாம சங்கீர்த்தனம் | G<br>போதிதருமர் | L<br>பரிஷத் | Q<br>ஹவாய் ஆதீனம் |
| C<br>வியாகரண மண்டபம் | H<br>தம்ம சேதனா | M<br>துளசிதாசர் | R<br>திருவாவடுதுறை ஆதீனம் |
| D<br>சத்போதம் | I<br>கடாரம் | N<br>ரிதம் | S<br>வியவகாரம் |
| E<br>சாரித்திரம் | J<br>பத்துமலை | O<br>கடிகை | T<br>சிக்ஷாவல்லி |

**41.** இந்து நாகரிகத்தில் வட இந்திய வைணவப் பக்தி நெறியோடு தொடர்புடைய தொகுதி யாது?
(1) B, D, K, M (2) B, I, K, P (3) D, K, Q, R (4) G, M, O, T (5) I, Q, R, T

**42.** இந்துக் கல்வி மரபுடன் தொடர்புடைய தொகுதி யாது?
(1) A, F, O, P (2) A, N, P, Q (3) C, O, P, R (4) E, I, M, O (5) G, I, R, S

**43.** மனித வாழ்வியலில் அறத்தினை வலியுறுத்தலுடன் தொடர்புடைய தொகுதி யாது?
(1) A, H, N, T (2) B, C, N, S (3) B, D, N, J (4) D, F, J, S (5) G, H, L, P

**44.** தர்ம சாத்திரங்களில் கூறப்பட்டுள்ள இந்து அரசியல் மற்றும் நீதிபரிபாலனத்துடன் தொடர்புடைய தொகுதி யாது?
(1) C, D, N, S (2) D, F, K, N (3) E, F, L, S (4) H, K, L, N (5) K, N, R, S

**45.** உலகளாவிய நிலையில் இந்துநாகரிகப் பரம்பலுடன் தொடர்புடைய தொகுதி யாது?
(1) D, J, L, Q (2) G, I, J, Q (3) I, J, M, O (4) J, L, Q, T (5) J, P, Q, R

● **46** தொடக்கம் **50** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் பொருந்தாததைத் தெரிவுசெய்க.

**46.** அனந்தசயன வடிவம்

(1) அஷ்ட நாகங்களுடன் தொடர்புடையது.

(2) யோகநிலைக் கோலமாகும்.

(3) பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் காணப்படுகிறது.

(4) சடாமுடியில் சங்கைக் கொண்டிருக்கும்.

(5) இடதுகரம் கடகமுத்திரை தரித்திருக்கும்.

**47.** இந்து, பௌத்த அற விழுமியங்கள்

(1) பௌத்தம் கூறும் சீலங்கள் இந்து சமயத்தின் யோக நெறியுடன் தொடர்புடையவை.

(2) பிரம்ம விஹாரா எனப் பௌத்தம் வலியுறுத்துவது இந்துமதத்தில் ஒழுக்கங்களாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

(3) இந்து சமயத்தைப் போல்வே பௌத்தமும் உடலாலும் உள்ளத்தாலும் வாக்காலும் மேற்கொள்ளப்படும் செயல்கள் குறித்து விபரித்துள்ளது.

(4) சாந்தோக்கிய உபநிடதத்தில் பௌத்தத்தைப் போலன்றி சற்று வேறுபட்ட நிலையில் பஞ்சமாபாதகம் பற்றிய விடயம் இடம்பெற்றுள்ளது.

(5) பௌத்தம் குறிப்பிடும் அட்டசீலங்களே இந்துக்களின் அட்ட மூர்த்திக் கோட்பாடாக இனங்காணப்பட்டுள்ளது.

**48.** திராவிடக் கோயில் கட்டடக் கலைப்பாணி

(1) பல்லவர்களே இக்கலைப்பாணியின் ஆரம்ப கர்த்தாக்கள்.

(2) பிரமிட் வடிவ விமானங்கள் இக்கலைமரபின் முக்கிய அடையாளமாகும்.

(3) மாமல்லபுர பீமரதத்தின் கூரையமைப்பு இக்கலைமரபைப் பின்பற்றியதாகும்.

(4) மதுரை மீனாட்சியம்மன் ஆலயம் இக்கலைப்பாணியின் நிறைவடிவமாகத் திகழ்கிறது.

(5) கொழும்பு கொச்சிக்கடை ஸ்ரீ பொன்னம்பல வாணேசுவரர் ஆலயம் இக்கலைப்பாணியைப் பின்பற்றி அமைக்கப்பட்டது.

**49.** திருக்கேதீச்சரத் திருத்தலம்

(1) மகாதேவன் கோயில் எனவும் அழைக்கப்பட்டது.

(2) இராஜேந்திர சோழனால் புனரமைக்கப்பட்டது.

(3) திருஞானசம்பந்தராலும் திருநாவுக்கரசராலும் பதிகம் பாடப்பெற்ற சிறப்புடையது.

(4) 2022 ஆம் ஆண்டில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

(5) மகோற்சவத்தின் போது ஐந்து தேர்கள் வலம் வருவது வழக்கம்.

**50.** தென்கிழக்காசிய நாடுகளில் பரவிய இந்துப் பண்பாடு

(1) அரசர்கள் தம்மைத் திருமாலின் அவதாரமாகக் கருதினர்.

(2) அகத்தியர் பட்டாரகுரு என்ற பெயரில் வணங்கப்பட்டார்.

(3) அரச அவையில் தர்ம சாஸ்திரங்கள் முக்கியத்துவம் பெற்றிருந்தன.

(4) தைப்பூசம் மிகுந்த முக்கியத்துவம் பெற்றிருந்தது.

(5) ஜாவா 'ஜனநாதபுரம்' எனப்பட்டது.

* * *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස (උ.පෙළ) විභාගය / க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2022 (2023)

විෂය අංකය / பாட இலக்கம்: **46**

විෂයය / பாடம்: **இந்து நாகரிகம்**

ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்
I පත්‍රය / பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 11. | 2 | 21. | 4 | 31. | 2 | 41. | 1 |
| 02. | 3 | 12. | 1 | 22. | 2 | 32. | 5 | 42. | 3 |
| 03. | 2 | 13. | 1 | 23. | 5 | 33. | 2 | 43. | 1 |
| 04. | 3 | 14. | 2 | 24. | 4 | 34. | 3 | 44. | 3 |
| 05. | 4 | 15. | 4 | 25. | 5 | 35. | 3 | 45. | 2 |
| 06. | 3 | 16. | 2 | 26. | 4 | 36. | 2 | 46. | 4 |
| 07. | 5 | 17. | 1 | 27. | 3 | 37. | 3 | 47. | 5 |
| 08. | 5 | 18. | 4 | 28. | 3 | 38. | 2 | 48. | 3 |
| 09. | 5 | 19. | 3 | 29. | 4 | 39. | 2 | 49. | 3 |
| 10. | 3 | 20. | 1 | 30. | 3 | 40. | 3 | 50. | 5 |

✪ විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் 1 x 50 = 50

# இந்து நாகரிகம்
## வினாத்தாள் II
## வினாத்தாளின் குறிக்கோள் பற்றிய அறிமுகம்

1. பாடசாலைகளில் பயனுறுதிமிக்க கற்றல் - கற்பித்தல் பற்றிய செயற்பாட்டின் பயன்பாட்டை இவ்வினாத்தாள் மூலம் மதிப்பீடு செய்தல்.

2. இந்து நாகரிகம் தொடர்பான பாடத்திட்டத்தில் உள்ள விடயங்களிலே மாணவர்களின் அடைவு மட்டத்தினைப் பரீட்சித்தல்.

3. இந்துப்பண்பாட்டு விழுமியங்களை நடைமுறை வாழ்வில் கைக்கொள்ளக் கூடியவர்களாகத் தமது அறிவுத் திறனைப் பெற்றுள்ளனரா? என்பதைப் பரீட்சித்தல்.

4. இந்து நாகரிகம் தொடர்பான விடயங்களைக் கற்று தத்தமது ஆளுமைகளை விருத்தி செய்யக்கூடிய தகுதியுள்ளனரா? என்பதைப் பரீட்சித்தல்.

5. இப்பாடத்தில் அடங்கியுள்ள விடயங்களைச் சமூக விருத்திக்கும் சமூக நல்லிணக்கத்திற்கும் எவ்வெவ் வகைகளில் பயன்படுத்தக்கூடிய அறிவுத் திறன் பெற்றுள்ளனர் என்பதைப் பரீட்சித்தல்.

6. மாணவர்கள் தேசிய மட்டத்திற்குரிய தகுதியைப் பெற்றுள்ளனரா? என்பதைப் பரீட்சித்தலும் இதன் நோக்கமாகும்.

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022(2023)

හින්දු ශිෂ්ටාචාරය II
இந்து நாகரிகம் II
Hindu Civilization II

46 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

* பகுதி I இலிருந்து எவையேனும் இரண்டு வினாக்களையும் பகுதி II இலிருந்து எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

1. இந்துப் பண்பாட்டு மரபில் சிவாகமங்கள் பெறும் முக்கியத்துவத்தினை மேல்வரும் தலைப்புகளில் விளக்குக.

   (அ) ஆகமம் என்ற சொல்லின் பொருள் விளக்கம்

   (ஆ) சிவாகமங்களின் கட்டமைப்பு

   (இ) திருக்கோயிற் பண்பாட்டுக்குரிய பங்களிப்பு

   (ஈ) தத்துவ சிந்தனை வளர்ச்சி (5 × 4 = 20 புள்ளிகள்)

2. இந்து தத்துவ வளர்ச்சிக்கு உபநிடதங்கள் மூலாதாரமாக விளங்குமாற்றை மேல்வரும் தலைப்புகளில் பரிசீலிக்குக.

   (அ) பிரம்மம்

   (ஆ) ஜீவன்

   (இ) ஆன்ம விடுதலை

   (ஈ) பிற்காலத் தத்துவங்களின் வளர்ச்சிக்கான பங்களிப்பு (5 × 4 = 20 புள்ளிகள்)

3. இலங்கையில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் நிகழ்ந்த சைவசமய மறுமலர்ச்சிச் செல்நெறியில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் வகிபங்கை மேல்வரும் தலைப்புகளில் ஆராய்க.

   (அ) தோன்றிய சூழல்

   (ஆ) சமயப்பணி

   (இ) கல்விப்பணி

   (ஈ) சமூகப்பணி (5 × 4 = 20 புள்ளிகள்)

## பகுதி II

**4.** அத்வைத வேதாந்தத்தின் அடிப்படைக் கருத்துக்கள் தொடர்பில் மேல்வரும் தலைப்புகளில் விளக்குக.

(அ) அத்வைதம் என்ற சொல்லின் விளக்கம் (02 புள்ளிகள்)

(ஆ) பிரம்மம் (06 புள்ளிகள்)

(இ) ஆன்மா (06 புள்ளிகள்)

(ஈ) மாயையும் உலக இருப்பும் (06 புள்ளிகள்)

(02 + 06 + 06 + 06 = 20 புள்ளிகள்)

**5.** வாழ்வியல் நெறியாகவும் தத்துவக் கோட்பாடாகவும் சைவசித்தாந்தம் திகழுமாற்றை மேல்வரும் தலைப்புகளில் விபரிக்குக.

(அ) கடவுட் கொள்கை (10 புள்ளிகள்)

(ஆ) வினையும் விடுதலையும் (10 புள்ளிகள்)

(10 + 10 = 20 புள்ளிகள்)

**6.** இந்துநாகரிக வரலாற்றில் விஜய நகர நாயக்கர் காலம் பெற்றுள்ள முக்கியத்துவத்தினை ஆராய்க. (20 புள்ளிகள்)

**7.** நவீன இந்துசமய சீர்திருத்த சிந்தனையாளர்களின் வரிசையில் இராஜாராம் மோகன்ராய் பெறுகின்ற முக்கியத்துவத்தினை மதிப்பிடுக. (20 புள்ளிகள்)

**8.** இந்துக்களின் வாழ்வியல் நடைமுறைகளில் வானியலும் சோதிடமும் பெற்று வந்துள்ள முக்கியத்துவத்தினை இனங்கண்டு விளக்குக. (20 புள்ளிகள்)

❋ ❋ ❋

# 46 இந்து நாகரிகம் II

## பகுதி I

01. இந்துப் பண்பாட்டு மரபில் சிவாகமங்கள் பெறும் முக்கியத்துவத்தினை மேல்வரும் தலைப்புகளில் விளக்குக.

அ) ஆகமம் என்ற சொல்லின் பொருள் விளக்கம்

ஆ) சிவாகமங்களின் கட்டமைப்பு

இ) திருக்கோயிற் பண்பாட்டுக்குரிய பங்களிப்பு

ஈ) தத்துவ சிந்தனை வளர்ச்சி

**அ. ஆகமம் என்ற சொல்லின் பொருள் விளக்கம்**

- ஆகமம் என்ற சொல்லிற்கு பொதுவான விளக்கங்களும் சிறப்பான விளக்கங்களும் கூறப்படுகின்றன. இப்பெயர் உணர்த்தும் பல்வேறு பொருள்களில் தோற்றம், வருகை, சாத்திரம், சாத்திர ஞானம், ஆப்த வாக்கியம் என்பன குறிப்பிடத்தக்கன.

- இப்பெயர் சுட்டும் சிறப்புப் பொருளைக் குறிப்பிடுமிடத்து "தொன்று தொட்டு வரும் அறிவு" என்ற பொருளில் அதற்குக் கருவியாகிய சமய நூல்களைக் குறிக்கும்.

- ஆ, க, ம என்ற மூன்றெழுத்துக்களும் முறையே ஆ என்பது பாசமெனவும் க என்பது பசுவெனவும் ம என்பது பதியெனவும் சைவசித்தாந்த அடிப்படையில் பொருள் கொள்ளப்படுகின்றது.

- அவ்வாறு பொருள் கொள்ளுமிடத்து ஆகமம் என்ற பெயர் சைவசித்தாந்தம் சிறப்பிக்கும் முப்பொருளைக் குறிப்பதாகின்றது. மேலும் ஆ என்பது சிவஞானம் எனவும் க என்பது மோட்ச சாதனம் எனவும் ம என்பது நாசம் எனவும் பொருள் கொள்ளப்பட்டு ஆன்மாக்களுக்கு மலத்தை நாசம் பண்ணி சிவஞானத்தை உதிப்பித்து மோட்சத்தைக் கொடுப்பதற்குரிய வழிமுறை கூறும் நூலாகவும் இதற்கு சிறப்பான விளக்கம் கூறப்படுகின்றது.

- திருமூலர் ஆகமங்களை இறைவன் நூல் என்றும் நாதனுரை என்றும் போற்றுவது சிறப்புடைத்து

(05 புள்ளிகள்)

**ஆ. சிவாகமங்களின் கட்டமைப்பு**

- சிவாகமங்கள், மூலாகமங்கள், உபாகமங்கள் என வகைப்படுத்தப்படுகின்றன.

- மூலாகமங்கள் காமிகம் முதல் வாதுளம் ஈறாக இருபத்தெட்டாகும்.

- இவை சிவபேதம் 10, உருத்திர பேதம் 18 என உபதேச வகையால் பகுக்கப்பட்டுள்ளன.

- சிவாகமங்கள் இறைவனால் தோற்றுவிக்கப்பட்டு உபதேச முறையின் மூலம் வளம்பெற்று வந்துள்ள மரபுவழி நம்பிக்கை குறிப்பிடத்தக்கதாகும்.

❖ சிவாகமம் நான்கு பிரிவுகளில் விடயங்களை கூறுகின்றது. அவையாவன : சரியாபாதம், கிரியாபாதம், யோகபாதம், ஞானபாதம் என்பனவாகும்.

கிரியாபாதம் – சமயாசாரங்களைக் கூறும்

சரியாபாதம் – மந்திரங்களை உச்சரித்தல், பூஜை, சந்தியா வந்தனம், ஜபம் செய்தல், ஹோமம் என்பவற்றை உபதேசிக்கும்.

யோகபாதம் – அட்டாங்க யோகத்துடன் கூடிய சிவயோகம் பற்றி கூறும்.

ஞானபாதம் – முப்பொருள் உண்மை, உலகின் தோற்றம் பற்றிக் கூறும்

(05 புள்ளிகள்)

இ. திருக்கோயிற் பண்பாட்டுக்குரிய பங்களிப்பு

❖ ஆகமங்களின் வழி திருக்கோயில் பண்பாட்டில் பக்தி நெறி சிறப்படைந்தது. சமய ஒழுக்கம், ஆலய வழிபாடு சிறக்க அவை உதவியுள்ளன.

❖ சைவசமய வாழ்க்கை, ஆலயக் கிரியைகள், வழிபாட்டு நெறி, சித்தாந்த சிந்தனைகள் வளம் பெற உதவியுள்ளன.

❖ ஆலய வழிபாட்டையும் அவை சார்ந்த அனுட்டானங்களையும் விதிகளாக விளக்கி பண்பாடு சிறக்க உதவியுள்ளன. நாவலரது சிவாலய தரிசன விதி என்ற நூல் இதற்குரிய உதாரணமாகும்.

❖ கோயிற் கிரியைகள் கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம் என்ற வகையில் விரிவு பெற்று மக்களிடையே திருக்கோயிற் பண்பாடு வளம் பெற உதவியுள்ளன.

❖ சிவாகம கிரியாபாதம் முக்கியத்துவமுடையது. வழிபடுவோரையும், இறைவனையும் இணைக்கும் அரிய சாதனமே பக்தி, சிவாகமம் சார்ந்த ஆலயங்கள் இப்பக்தி நெறியின் ஆதாரமாக விளங்கி வருகின்றன. ஆலய சேவை, திருப்பணியில் இணைதல் ஆகிய சிவப்பணிகள் திருக்கோயில் பண்பாட்டில் சிறக்க ஆகமங்கள் பங்களிப்பு நல்கியுள்ளன. கிரியை நிகழும் வேளை தியானம், ஜபம் ஆகியவற்றால் பக்தன் இறையனுபவம் பெற்று உள்ளத்தில் பண்புள்ளவனாகத் திகழ வாய்ப்பேற்பட்டுள்ளது.

❖ சிவசின்னங்களை அணிந்து சைவப்பண்பாட்டைப் பேணவும் ஆகமம் சார்ந்த திருக்கோயில் வழிபாடு உதவியது.

❖ மகோற்சவத் தேர்த்திருவிழாவில் பக்தர்கள் அனைவரும் ஊர் கூடி தேர் இழுத்தல் என்ற அடிப்படையில் சமூக நன்மையைப் பேண திருக்கோயில் பங்களிப்பு உதவியது.

(05 புள்ளிகள்)

**ஈ. தத்துவ சிந்தனை வளர்ச்சி**

- ❖ சைவசித்தாந்த சிந்தனைகள் வளம்பெற்று மக்களிடையே ஆன்மீகம் சார்ந்த பண்பாடு வளம்பெற ஆகமங்கள் திருக்கோயில் மரபின் அடிப்படையில் அரிய பங்களிப்பு நல்கியுள்ளன.

- ❖ சிவாகமங்கள் கூறும் கிரியாபாதத்தின் வழி இடம்பெறும் ஆலய வழிபாட்டுடன் சித்தாந்த சிந்தனைகளும் மேன்மையடைந்தன. ஆகமங்களின் வரிசையில் கிரணாகமம், ரௌரவம், பௌஷ்கரம், மிருகேந்திரம் போன்ற ஆகமங்களில் சைவசித்தாந்த சிந்தனைகள் பெரிதும் காணப்படுகின்றன.

- ❖ சிவாகமங்களில் யோகபாதம், ஞானபாதம் என்பவற்றில் இடம்பெறும் சைவசித்தாந்த சிந்தனைகளின் பெருமைகளை திருநெல்வேலி ஞானப்பிரகாச சுவாமிகள், உமாபதி சிவாச்சாரியார் போன்றவர்கள் நன்கு எடுத்துக் காட்டியுள்ளனர்.

- ❖ கிரணாகமம் : பதிபடலம், பசுபடலம், மாயா படலம், சத்திநிபாத படலம் போன்ற தலைப்புகளில் சைவ சித்தாந்த உண்மைகளை விபரிக்கின்றது.

- ❖ சிவாகமங்களின் நான்கு பாதங்களிலும் சைவசித்தாந்த சாதனைகள், குரு லிங்க சங்கம வழிபாடு, பஞ்சாட்சர ஜபம், சிவ சின்னங்கள், தீட்சை பற்றிய விளக்கங்கள் உண்டு.

- ❖ ஆன்மாவின் இறுதி இலட்சியமாக சிறப்புப் பெறும் முக்தி ( தாடலை ) பற்றியும் சிவாகமங்கள் கூறுகின்றன.

- ❖ சிவாகமம் கூறும் சைவசித்தாந்த சிந்தனைகள் தேவார திருவாசம், திருமந்திரம் போன்றவற்றில் வளம்பெற்று வந்துள்ளன. திருமந்திரம் தத்துவ சிந்தனை வளர்ச்சியில் சிவாகமங்களை அடிப்படையாகக் கொண்டு விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

(05 புள்ளிகள்)

05 + 05 + 05 +05 = (20 புள்ளிகள்)

**02. இந்து தத்துவ வளர்ச்சிக்கு உபநிடதங்கள் மூலாதாரமாக விளங்குமாற்றை மேல்வரும் தலைப்புகளில் பரிசீலிக்குக.**

**அ) பிரமம்**

**ஆ) ஜீவன்**

**இ) ஆன்ம விடுதலை**

**ஈ) பிற்காலத் தத்துவங்களின் வளர்ச்சிக்கான பங்களிப்பு**

**அ. பிரமம்**

- ❖ வேதங்களின் இறுதி அம்சமாகிய உபநிடதங்கள் ஞானகாண்டம் எனச் சிறப்பிக்கப்படுவதோடு வேதாந்தம் எனவும் பெயர் பெறுகின்றது.

- ❖ பிரமம் பற்றிய அறிவும் தன்னைப் பிரமமாக உணர்வதுமே உபநிடத உரையாடல்களின் அடிப்படைப் பொருளாகும்.

- ❖ பிரமம் தானாகவே இயங்குவது, உலகின் மூல காரணமானது - முண்டக உபநிடதம் சிலந்தியானது தன்னிடமிருந்து நூலை உண்டாக்கி அதனைப் பற்றி நிற்கின்றது, அதுபோன்றே பிரமம் தன்னிடமிருந்து உலகினைப் படைத்துள்ளது எனக் கூறும்.

- ❖ பிரமத்திலிருந்து உலகம் தோற்றுவிக்கப்பட்டாலும் பிரமத்தில் எவ்வித குறைபாடும் ஏற்படுவதில்லை அது பூரணமாகும்.

- ❖ பிரமம் சொல்லால் வர்ணிக்க முடியாது, இது மூன்று தன்மைகளால் விளக்கப்படுகின்றது. அவை, சத்தியம், ஞானம், அனந்தம் என்பனவாகும்.

- ❖ பிரமம், உண்மையானது, பேரறிவானது, எல்லையற்ற ஆனந்தமுடையது.

- ❖ சுவேதாசுவதர உபநிடதத்தில் எள்ளில் எண்ணெய் போலவும், தயிரில் நெய் போலவும், விறகில் தீ போலவும் பிரம தத்துவம் மறைந்துள்ளது என பிரம்மத்தின் சர்வவியாபகத் தன்மை கூறப்படுகிறது.

- ❖ எதனால் உலகம் தோன்றி எதனால் இவ்வுலகம் இயங்கி எதில் இவ்வுலகம் ஒடுங்குகின்றதோ அதுவே பிரமம் என உபநிடதங்கள் பகருகின்றன.

- ❖ தத்துவமசி, அகம் பிரம்மாஸ்மி போன்ற மகாவாக்கியங்கள் ஆன்மாவே பிரமம் பிரமமே ஆன்மா என்பதனைச் சுட்டுகின்றன.

- ❖ உபநிடதங்கள் நிஷ்பிரபஞ்ச, சப்பிரபஞ்ச நிலைகளையும் (தஜ்ஜலன்) விளக்குகின்றன.

(05 புள்ளிகள்)

**ஆ. ஜீவன்**

- ❖ ஜீவன் ஆன்மா என அழைக்கப்படுகின்றது.
- ❖ உபநிடதங்களில் ஆன்மா பற்றிய சிந்தனைகள் மனித வாழ்வியல் சிந்தனைகளுடன் இணைக்கப்பட்டுள்ளன.
- ❖ ஆன்மாவாகிய ஜீவன் வேறு, உடல் வேறு என்பது 'வண்டியில் பூட்டிய குதிரை போன்றது ஆன்மா' என விளக்கப்பட்டுள்ளது.
- ❖ ஆன்மா பஞ்ச கோசங்களால் சூழப்பட்டுள்ளது.
- ❖ 'காண்பது கண்ணல்ல. கண்ணைக் கருவியாகக் கொண்டு காண்பது எதுவோ அதுவே ஆன்மா....'
- ❖ ஆன்மா ஜீவாத்மா எனவும் பிரமம் பரமாத்மா எனவும் கூறப்படுகின்றது.
- ❖ ஆன்மாக்கள் தாம் செய்த வினையின் பிரகாரம் பல்வேறு பிறவிகளைப் பெறுகின்றன.
- ❖ "நெற்கதிர் முற்றி உதிர்ந்து மீண்டும் முளைப்பது போன்று ஆன்மாவாகிய ஜீவன் ஒருபிறவியினை விட்டு மற்றொரு பிறவியினை எடுக்கின்றது.
- ❖ உடம்பினுள்ளே ஆன்மா உருவமற்ற உணர்வாக விளங்குகின்றது.

(05 புள்ளிகள்)

**இ. ஆன்ம விடுதலை**

- ❖ ஆன்ம விடுதலைக்கான வழிவகைகளுள் பற்றுக்களில் இருந்து விடுபடுதல் முக்கியமானது.
- ❖ ஆன்மாவாகிய ஜீவனுக்குப் பிரமஞானத்தை ஏற்படுத்த குருவின் வழிகாட்டல் அவசியமாகின்றது.
- ❖ உபநிடதங்கள் பிரமஞானத்தை மட்டுமன்றி ஒருவனது உள்ளம் அமைதி பெறவும் ஞான உணர்வினை அடையவும் வழிகாட்டுகின்றன.
- ❖ சிரவணம், மனனம், நிதித்தியாசனம் ஆகிய ஞானவழிகள் கூறப்படுகின்றன.
- ❖ ஞானத்தினால் ஒருவன் பூரண விடுதலை பெறுகின்றான்.
- ❖ "என்னை இறப்பிலிருந்து இறவாமைக்கு இட்டுச் செல்......' என்ற வாக்கியத்தின் மூலம் ஆன்ம விடுதலை பற்றி விளக்கப்படுகின்றது.
- ❖ கடோபநிடதத்தில் ஆன்ம விடுதலை பற்றி நன்கு விளக்கப்பட்டுள்ளது.

(05 புள்ளிகள்)

**ஈ. பிற்காலத் தத்துவங்களின் வளர்ச்சிக்கான பங்களிப்பு**

❖ பிற்காலத் தத்துவ வளர்ச்சிக்கான மகாவாக்கியங்கள் உபநிடதங்களில் காணப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| தத்துவமஸி | - | நீ அது ஆகின்றாய் |
| அகம் பிரம்மாஸ்மி | - | நான் பிரமம் |
| அயம் ஆத்மா பிரமம் | - | இந்த ஆத்மாவே பிரமம் |
| சர்வம் கலு இதம் பிரம்மம் | - | அனைத்துமே பிரமம் |
| சோ(அ)கம் அஸ்மி | - | நானே அவன் |
| பிரக்ஞானம் பிரமம் | - | அறிவே பிரமம் முதலானவை குறிப்பிடத்தக்கன. |

❖ பிற்பட்ட தத்துவ சிந்தனையாளர்கள் பிரமம், ஆன்மாவாகிய ஜீவன், பிரபஞ்சம், ஆன்மவிடுதலை பற்றிய உண்மைகளை அறியவும் உணரவும் இவை உதவுகின்றன.

❖ உபநிடத மகாவாக்கியங்களில் ஒன்றாகிய 'தத்துவமஸி' என்பதன் விளக்கமாக பகவத்கீதை உள்ளமை சிறப்பம்சமாகும்.

❖ பிற்காலத் தத்துவ சிந்தனையாளர்களாகிய சங்கரர், இராமானுஜர், மத்துவர் போன்றோர் தத்தமது கோட்பாட்டினை நிறுவ உபநிடத மகாவாக்கியங்கள் மற்றும் பிரம்ம சூத்திரம் ஆகியன அடிப்படையாக அமைந்தன.

❖ வேதாந்த தத்துவ மரபுகளாகிய அத்வைதம், விசிட்டாத்வைதம், துவைதம் போன்றவை உபநிடதங்கள் மூலம் வளம் பெற்றன.

❖ வேதம் கூறும் 'ஏகம் சத்' என்ற சிந்தனையே உபநிடதங்களில் மகாவாக்கியங்களாக விரிவு பெற்று பிரம விசாரணைக்கும் அதனை மூலமாகக் கொண்ட தத்துவங்களின் வளர்ச்சிக்கும் முன்னோடியாக அமைந்தன.

❖ உபநிடத உரையாடல்களும் சிந்தனைகளும் தத்துவ எழுச்சிக்கான வினாவிடையாக உள்ளன.

❖ பிருஹதாரணியக உபநிடதத்தில் தத்துவஞானத்தை நோக்கமாகக் கொண்ட ஒருவனது உபாசனைகளும் வேண்டுதல்களும் கூட இக்கால தத்துவ சிந்தனையாளர்களுக்கு உதவியுள்ளன.

❖ 'என்னைத் தீமையிலிருந்து நன்மைக்கு இட்டுச் செல்வாயாக............'
என்னை இருளில் இருந்து ஒளிக்கு இட்டுச் செல்வாயாக
என்னை இறப்பில் இருந்து இறவாமைக்கு இட்டுச் செல்வாயாக

❖ பிற்காலச் சைவசித்தாந்தக் கோட்பாட்டிற்கும் உபநிடதங்கள் அடிப்படையாக அமைகின்றன.

❖ 'வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தம்' என்ற தொடர் குறிப்பிடத்தக்கது.

❖ ஆன்ம விடுதலையே உபநிடதங்களினதும் பிற்காலத் தத்துவங்களினதும் உன்னத உபதேசங்களாகும்.

(05 புள்ளிகள்)

மொத்தம் 05 + 05 + 05 + 05 = 20 புள்ளிகள்

03. இலங்கையில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் நிகழ்ந்த சைவசமய மறுமலர்ச்சிச் செல்நெறியில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் வகிபங்கை மேல்வரும் தலைப்புகளில் ஆராய்க.

அ) தோன்றிய சூழல்
ஆ) சமயப்பணி
இ) கல்விப்பணி
ஈ) சமூகப்பணி

அ. தோன்றிய சூழல்

❖ இலங்கையில் 19 ஆம் நூற்றாண்டில் சைவசமயத்திற்கும் சமூகத்திற்கும் பிற சமயத்தவர்களால் ஏற்படுத்தப்பட்ட இடையூறுகளிலிருந்து விடுவித்து சைவசமயத்தை மறுமலர்ச்சியடைய தம் வாழ்நாளை அர்ப்பணித்தவர் நல்லை நகர் நாவலராவார். 19 ஆம் நூற்றாண்டில் ஈழத்தில் கிறிஸ்தவ மிஷனரிமாரின் செல்வாக்குப் பெற்ற காலத்தில் கந்தப்பிள்ளை சிவகாமி தம்பதியினருக்கு நல்லூரில் 1882 ஆம் ஆண்டு டிசம்பர் 18 ஆம் திகதி பிறந்தார்.

❖ தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் தேர்ச்சியுடையவர். சுப்ரமணிய உபாத்தியார், வேலாயுத முதலியார், சரவணமுத்து உபாத்தியார், சேனாதிராய முதலியார் ஆகியோரிடம் குருகுல முறையில் கல்வி பயின்றவர்.

❖ யாழ் வெஸ்லியன் மிஷன் கல்லூரியில் (யாழ்ப்பாண மத்திய கல்லூரி) கல்வி பயின்று சகல துறைகளிலும் பாண்டித்தியம் பெற்றவர். ஏழு ஆண்டுகள் அக்கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றியவர்.

❖ சைவசமயத்தையும் அதன் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டும் என்ற இலட்சியத்தில் ஆசிரியப் பணியிலிருந்து விலகியவர்.

❖ கற்க வேண்டிய சமய சாஸ்திரங்கள், புராணங்கள் மற்றும் சித்தாந்த சாஸ்திர நூல்கள், திருமுறைகள் ஆகியவற்றை நன்கு கற்றுத் தேறியமையால் சைவ சமயத்திற்குரிய பாதுகாவலனாக விளங்கும் சாதனையாளராகத் திகழ்ந்தார்.

( 05 புள்ளிகள்)

ஆ. சமயப்பணி

❖ நாவலர் சிறந்த தீர்க்கதரிசி.

❖ தமிழகத்தை ஈழநாட்டிற்குக் கடமைப்படுத்தியவர்.

❖ நாவலர் சென்னையில் வாழ்ந்த காலத்தில் சைவத்தை மேனிலைப்படுத்தி, தமிழுக்கு அளப்பரிய பங்களிப்பு நல்கியவர்.

❖ அங்கு ஆதீனங்களின் அழைப்பினை ஏற்று அனைவரும் பாராட்டத்தக்கவகையில் பிரசங்கமழை பொழிந்தவர். நாவலர் சைவ ஒழுக்கத்தின் படி வாழ்ந்து; சமய உண்மைகளை உணர்ந்து அரிய சமயப் பணி ஆற்றியவர்.

❖ நாவலரின் தன்னலமற்ற சைவத்தொண்டு சைவசமயத்தைப் பலவகையில் அரண் செய்தது.

❖ பிற சமயத்தவர் செயற்பாட்டால் தளர்வுற்ற சைவசமயத்தையும் மக்களையும் உயர் நிலைக்குக் கொண்டு வர அவரது அளப்பரிய சமயப் பணிகள் மூலாதாரமாக அமைந்தன.

❖ உன்னதமான சைவக்காவலன், நல்லறிஞன், நல்லாசிரியர், ஆற்றல் மிகு சமயப் பிரசாரகர் என்ற பல நிலைகளில் சமயப்பணியாற்றி சாதனை படைத்தவர்.

❖ சிவபூமி எனத் திருமூலரால் போற்றப்பட்ட ஈழத்தில் கந்தபுராணம் சார்ந்த தமது சமயப்பணிகளால் யாழ்ப்பாணக் கலாசாரம் கந்தபுராண கலாசாரம் என போற்றப்பட காரணகர்த்தாவாக விளங்கியவர்.

❖ சைவப்பிரசங்கப் பணி : வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில், புராணபடனம், நிகழ்த்தியவர். நல்லூர் கந்தசுவாமி கோயில் ஆலயப் புனருத்தாரணத்திற்கு ஆற்றுப்படுத்தியவர்.

❖ சைவவினாவிடை, கந்தபுராண வசனம், பாலபாடம், பண்ணிசை வளர்த்தவர். நல்லூர் மகோற்சவ காலங்களில் திருவாவடுதுறையிலிருந்து ஓதுவார்களை அழைத்து பண்ணிசை ஓதுவித்தவர், சைவத்தின் மாண்பை கண்டனப் பிரசுரங்கள் மூலம் நிலை நிறுத்தியவர். சைவதூஷண பரிகாரம், யாழ்ப்பாணத்துச் சமயநிலை உதாரணங்கள், இவரது சமயப் பிரசங்கத் திறமையை பாராட்டி திருவாவடுதுறை ஆதீனம் நாவலர் என்ற பட்டம் வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

(05 புள்ளிகள்)

**இ. கல்விப்பணி**

❖ நாவலர், மாணவர்கள் சைவசமயச் சூழலில் கல்வி கற்றுப் பயனடையும் வகையில் சைவப்பிரகாச வித்தியாசாலைகள் அமைத்தார்.1848 இல் வண்ணார் பண்ணையிலும் 1864 இல் சிதம்பரத்திலும் அமைத்ததோடு 1871 இல் புலோலியில் சைவ ஆங்கில வித்தியாசாலையையும் அமைத்தார்.

❖ வித்தியாசாலைகளை நிர்வகிக்கும் முகாமையாளராக இருந்தார்.
❖ முதியோர் கல்வி வளர்ச்சிக்கு உதவியவர்.
❖ பெண்களுக்குரிய கல்வியின் அவசியம் பற்றி வற்புறுத்தியவர். நல்லாசிரியராகப் பணி புரிந்தவர்.
❖ கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு சமய நூலுணர்ச்சி ஊட்டவல்ல அரிய நூல்களை அச்சிட்டு வெளியிட முயற்சிகள் மேற்கொண்டார்.

(05 புள்ளிகள்)

ஈ. சமூகப்பணி

- நாவலர் சமயத்தைப் போற்றிப் பாதுகாத்தது போன்று சமூகத்தையும் தமது அரிய பணிகள் மூலம் மேம்படுத்தியவர்.

- 1876 -1877 ஆண்டுகளில் கடும் வரட்சி ஏற்பட்ட வேளையில் கஞ்சித் தொட்டி தருமம் மேற்கொண்டார்.

- யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் பேதிநோய் பரவிய போது மக்களோடு மக்களாக நின்று முதலுதவிகளையும் ஏற்று பரிகாரங்களையும் மேற்கொண்டவர்.

- சமூகத்தைப் பாதிக்கும் மதுபாவனை, சூதாடுதல் முதலியவற்றை ஒழிக்கப் பாடுபட்டார்.

- யாழ்ப்பாணக் கச்சேரி நிர்வாக ஊழல்கள் தொடர்பாக 1878 ஆம் ஆண்டு அங்கு வந்த தேசாதிபதிக்கு விண்ணப்பம் ஒன்றை வழங்கியமை அவரது சமூகநலன் பேணும் பண்பிற்கு எடுத்துக் காட்டு.

- சுதேசிய எழுச்சிக்காகப் பாடுபட்ட தேசிய வீரராகத் திகழ்ந்தவர்.

- இவ்வாறு நாவலர் சைவத் தமிழ் மரபிற் புலமைமிக்க மாணவர் பரம்பரையை உருவாக்கிச் சமகால செல்நெறியில் சைவ மறுமலர்ச்சிக்கு காரணமாக விளங்கியவர்.

- 1971 ல் இலங்கை அரசாங்கம் நாவலர் நினைவு முத்திரையை வெளியிட்டு கௌரவித்துள்ளது.

- நாவலர் பதிப்பே நல்ல பதிப்பு என்று அன்றும் இன்றும் அறிஞர்களால் பாராட்டப்பட்டது.

- பத்திரிகைத்துறைக்குவித்திட்டமைமன்னாருக்குசமீபமாகமாதோட்டம்என்னும்நன்னகரில்தேன்பொந்து ஒன்று உள்ளது. அதனைச் சென்றடையுங்கள் என்று, அன்று நாவலர் ஆற்றுப்படுத்தியதற்கு ஏற்ப திருக்கேதீச்சரத் திருக்கோயில் திருப்பணிகளை இந்திய அரசு பலகோடி நிதியுதவியில் கருங்கற் திருப்பணியாக இடம்பெற்று (2022 இல்) மகாகும்பாபிஷேகம் நிறைவேறியமை.

- சமகால சைவசமய மறுமலர்ச்சிக்குச் சிறந்த உதாரணம் நாவலர் வழியில் திருக்கேதீச்சர மறுமலர்ச்சி எனச் சிறப்பித்தது.

- நாவலரது அரிய சிந்தனைகளை சமகாலச் சைவசமய வளர்ச்சிக்கு செயற்படுத்துவதில் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை, ஆறுமுகநாவலர் சபை, அகில இலங்கை சைவப்புலவர் சங்கம், ஆதீனம் மற்றும் மன்றங்கள் நாவலர் வழிவந்த சமயப் பெரியார்கள் சைவசமய மறுமலர்ச்சிக்கு அரிய பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

- நாவலர் அவதரித்து 200வது நிறைவினையொட்டி சென்ற வருடம் ( 2022 ) நிறுவனங்களும் சைவப்பெரியார்களும் விழாவெடுத்து நிகழ்ச்சிகள் பல நடாத்தியமை அவராற்றிய சைவசமய மறுமலர்ச்சிப் பணிகளுக்கும் அவருக்கும் அளித்த கௌரவமாகும்.

(05 புள்ளிகள்)

05 + 05 + 05 + 05 = (20 புள்ளிகள்)

**04. சங்கரரின் அத்வைத வேதாந்தத்தின் அடிப்படைக் கருத்துக்கள் தொடர்பில் மேல்வரும் தலைப்புகளில் விளக்குக.**

**(அ) அத்வைதம் என்ற சொல்லின் விளக்கம்**
**(ஆ)பிரம்மம்**
**(இ) ஆன்மா**
**(ஈ) மாயையும் உலக இருப்பும்**

**அ) அத்வைதம் என்ற சொல்லின் விளக்கம்**

- ❖ அத்வைதம் என்பது, அ + துவைதம் எனப்பிரித்து உள்பொருள் இரண்டு அல்ல ஒன்று எனப்பொருள் கொள்ளப்படுகின்றது.
- ❖ பிரம்மம், ஆன்மா பற்றிய இருமை இன்மைக் கொள்கையே அத்வைதம் போதிக்கும் அடிப்படைக் கொள்கையாகும்.
- ❖ பிரம்மம் சுத்தசைதன்ய வஸ்து எனச் சுட்டப்படுகின்றது. (தூய அறிவுடைய பொருள்)
- ❖ சங்கரர் அத்வைத தத்துவத்தினை அரைச் சுலோகத்தில் உள்ளடக்கியுள்ளார்.
- ❖ "பிரம்மம் சத்தியம், ஜகத்மித்தியா, ஜீவோ பிரம்ம ஏவ ந அபர" – பிரமம் உண்மைப் பொருள், இந்த உலகம் தோற்றமே, ஒவ்வொரு ஆன்மாவும் பிரம்மந்தான் வேறொன்றும் இல்லை என்பது இதன் பொருளாகும்.

(02 புள்ளிகள்)

**ஆ. பிரம்மம்**

- ❖ பிரம்மமானது, ஆன்மா, உலகம் ஆகிய இரு பொருள்களைக் காட்டிலும் முதன்மையானது.
- ❖ பிரம்மம் மட்டுமே உண்மைப் பொருள் ஏனையவை யாவும் தோற்றமே.
- ❖ பிரமம் அநாதியானது, அந்தமற்றது, அழிவில்லாதது, எங்கும் செறிந்து நீக்கமற நிறைந்திருப்பது, பிரம்மம் எதனைப் போன்றதாக இல்லை எனக் கூறலாமே ஒழிய எதுவாக உள்ளது என விளங்க வைப்பது கடினம். (நேதி)
- ❖ பிரமத்தின் இரு நிலைகள்
  நிர்க்குணநிலை – பிரமத்தின் இயல்பான உண்மை நிலை
  சகுணநிலை – மாயையுடன் கூடிய நிலை, குணங்களோடு கூடிய நிலை, (ஈஸ்வரன்)
- ❖ ஒரேயொரு மூலப்பொருளாயுள்ள பிரம்மம் பல சீவன்களாகின்றது. ஆன்மாவே பிரம்மம், தத்துவம் அஸி, அகம்பிரம்மாஸ்மி, சோ(அ)கம் அஸ்மி, போன்ற உபநிடத மகாவாக்கியங்கள் இதற்குச் சான்று.
- ❖ பிரம்மம் ஒன்றே ; அஞ்ஞானத்தின் காரணமாக அது பலவகைப் பொருட்களாகக் காட்சியளிக்கின்றது.
- ❖ பிரம்மமே எங்கும் பரந்திருக்கும் பரிபூரணப் பொருளாகும். பிரம்மம் ஒன்றே என்பதற்கு அத்வைதம், கேவல அத்வைதம், பிரம்ம பரிபூரணவாதம், ஒருமைவாதம், ஏகான்ம வாதம் போன்ற பல பெயர்களை வழங்குகிறது.

(06 புள்ளிகள்)

**இ. ஆன்மா**

- ❖ அத்வைதம் ஏகான்ம வாதத்தை வலியுறுத்துகின்றது.
- ❖ பிரம்மமே அவித்தையின் காரணமாக ஆன்மாக்களாகத் தோற்றமளிக்கின்றது.
- ❖ இதனை நிரூபிப்பதற்கு அவச்சேதவாதம், பிரதிவிம்பவாதம் ஆகியவற்றை அத்வைதிகள் பயன்படுத்துகின்றனர்.
- ❖ அவித்தை என்பதன் பொருள் அறியாமை ஆகும். இதன் காரணமாகவே பிரம்மத்திலிருந்து ஆன்மா தன்னை வேறுபட்டதாகக் கருதிக்கொள்கின்றது.

- ❖ அடிப்படையில் ஒவ்வொரு ஆன்மாவும் பிரம்மமே.
- ❖ அறியாமையில் இருந்து நீங்கி 'தானே பிரம்மம்' என உணர்தலே அத்வைத அனுபவமாகும். இதுவே ஆன்ம விடுதலை ஆகும். (சீவன்முத்தி, விதேகமுத்தி)
- ❖ ஞானமே ஆன்ம விடுதலைக்குரிய வழியாகும்.
- ❖ ஆன்மாவே பிரம்மம் என்பதற்கு உபநிடத மகாவாக்கியங்களைச் சான்று காட்டுதல்

(06 புள்ளிகள்)

**ஈ. மாயையும் உலக இருப்பும்**

- ❖ அத்வைதக் கொள்கையின் படி உலகம் என்பது உண்மையல்ல. அது தோற்றம் என்பதாகும்.
- ❖ பிரம்மம் உலகாக மாறுவதாகத் தோற்றமளிக்கின்றதேயன்றி உண்மையில் பிரம்மத்தில் மாற்றமேதும் ஏற்படுவதில்லை என விவர்த்த வாதம் அத்வைதிகளால் முன்வைக்கப்படுகின்றது. (சத்காரணவாதம்)
- ❖ விவர்த்தவாதம் என்பது ஒருபொருள் இன்னொன்றாக மாறாமல் இருந்தபடியே மாறிவிட்டதாகத் தோன்றும். உதாரணம் – இருட்டுவேளையில் கயிறு பாம்பாக மாறித்தெரியும் காட்சி.
- ❖ சதசத் இலட்சணம்
- ❖ மாயையினைச் சொல்லால் விளக்க முடியாது. இதனால் அது 'அநிர்வசனியம்' அல்லது 'அவாச்சியம்' எனப்படும்.
- ❖ மாயைக்கு இரு இயல்புகள் உள்ளன. அவையாவன,

  ஆவரணம் – உள்ளதை மறைக்கும் இயல்பு

  விக்ஷேபம் – இல்லாததைத் தோற்றுவிக்கும் இயல்பு
- ❖ கனவுலகவாதம்: பிரதிபாக்ஷிகம், வியவகாரிகம், பாரமார்த்திகம்

(06 புள்ளிகள்)

02 + 06 + 06 +06 = (20 புள்ளிகள்)

**05. வாழ்வியல் நெறியாகவும் தத்துவக் கோட்பாடாகவும் சைவசித்தாந்தம் திகழுமாற்றை மேல்வரும் தலைப்புகளில் விபரிக்குக.**

**(அ) கடவுட் கொள்கை**

**(ஆ) வினையும் விடுதலையும்**

**அ. கடவுட் கொள்கை**

- ❖ சைவசித்தாந்தம் கூறும் கடவுட்கொள்கை மக்களது வாழ்வியலோடு நெருங்கிய தொடர்புடையது.
- ❖ சைவசித்தாந்திகள் கடவுளாகிய இறைவனை, இறை, பதி, பரமசிவன், ஈசன், பரமாத்மா எனப் பல பெயர்களால் குறிப்பிடுவர்.
- ❖ இத்தத்துவக் கோட்பாட்டின் படி கடவுள் எல்லா உயிர்களுக்கும் எல்லா உலகங்களுக்கும் தலைவர் என்ற வகையில் பதி என சிறப்பிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.
- ❖ கடவுள் இருப்பினை நிறுவ சைவசித்தாந்தம் பிரத்தியட்சம், அனுமானம், ஆப்தவாக்கியம் என்பவற்றைப் பிரமாணங்களாக கொள்கின்றது.
- ❖ பானை உண்டெனில் அதனைப் படைத்தவனும் உளன் என்பதன் அடிப்படையில் கடவுளின் இருப்பு நிறுவப்படுகின்றது.
- ❖ உலகைக் கொண்டும் பதியாக இறைவன் உள்ளான் என்பதனை நிரூபிக்க அனுமானப் பிரமாணம் உதவுகின்றது. அவனே நிமித்த காரணன் எனச் சைவசித்தாந்தம் கூறும்.
- ❖ ஆன்மாக்கள் செய்த வினைகளின் பயன்களைச் சேர்க்க ஒருவன் வேண்டும். அவனே கடவுளாகிய இறைவன். அவனே தனு, கரண, புவன, போகங்களைத் தருபவன் என்பது சைவசித்தாந்த கடவுட் கோட்பாடு ஆகும்.
- ❖ கடவுள் ஒரு நாமம், ஓருருவம் ஒன்றுமிலான். தத்துவங்களைக் கடந்தும் தத்துவங்களோடு பிரிந்தும் பிரிப்பின்றியும் இருப்பவன்.
- ❖ அளவைகளுக்கு எட்டாதவன்.
- ❖ கடவுளாகிய பதிக்கு இரு நிலைகள் சைவசித்தாந்தத்தில் கூறப்படுகின்றது.

  சிறப்பியல்பு – சொரூப இலட்சணம்

  பொது இயல்பு – தடத்த இலட்சணம்
- ❖ பதி, ஊரிலான், பேரிலான், குணமிலான், போக்கிலான், இப்படியன், இந்நிறத்தன், இவ்வண்ணத்தன், இவன் என எவராலும் கூறமுடியாது.
- ❖ இவ்வாறு கருவி, கரணங்களுக்கு அப்பாற்பட்டு நிற்கும் நிலையை சொரூப இலட்சணம் என்பர். இதனை சிவப்பிரகாசம்,

  "..அதுதான் நிலவும் அருவுருவன்றி குணங்குறிகளின்றி நின்மலமாய் ஏகமாய் நித்தமாகி அலகிலுயிர்க்குணர்வாகி அசலமாய் அகண்டிதமாய் ஆனந்தவுருவாயன்றி...." எனக் குறிப்பிடுகின்றது.
- ❖ கடவுள் ஆன்மாக்களின் மீது கொண்ட பெருங்கருணையினாலே அநாதியாகவே மலத்தால் பந்திக்கப்பட்டிருக்கும். அவற்றின் துன்பங்களைப் போக்கி அருள்புரிவதற்காக தன்னிலையில் நின்றும் ஒருபடி கீழ் இறங்கி வந்து எழுந்தருளும் நிலை தடத்த இலட்சணமாகும்.
- ❖ கடவுளின் இயல்பு – ஞானமும் ஆனந்தமும் ஆகும். இதனை சத் சித் ஆனந்தம் என்பர். இம்மூன்றினுள்ளும் இறைவனது எண்குணங்கள் அடங்கும். என்றுமுள்ள எக்காலத்துக்கும் ஒரே தன்மையான பொருள் சத் ஆகும். தன்வயமாதல் அதனுள் அடங்கும். சித்தில் தூய உடம்பினனாதல், முற்றுமுணர்தல், இயற்கை உணர்வினனாதல், இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை ஆகிய குணங்கள் பற்றிச் சைவசித்தாந்தம் கூறுகின்றது.
- ❖ ஆனந்தத்தில் வரம்பிலின்பமுடைமை அடங்கும். கடவுட் கோட்பாட்டிற்கு சைவசித்தாந்தம் இவ்வாறான எண்குணங்களை சான்றாகக் கொள்கின்றது.

- ❖ சிவனாகிய கடவுளின் மேலான சக்தி பராசக்தி. கடவுள் அசுத்தமாயையினின்றும் உலகங்களைத் தோற்றுவிப்பான். உரிய காலம் வரை நிலைநிறுத்தி காத்து, பின் தோன்றி முறையே ஒடுங்கச் செய்து முடிவில் தன்னில் ஒடுங்கச் செய்வான்.
- ❖ சிவன் முப்பத்தாறு தத்துவங்களில் இருந்து கொண்டு அவ்வவ்த்தொழிலைச் செய்வார்.
- ❖ கடவுள் கொள்ளும் திருமேனிகள் மூன்று. அவை அருவம், உருவம், அருவுருவம் என்பனவாகும்.
- ❖ தடத்த நிலையில் இறைவனாகிய கடவுள் ஆற்றும் ஐந்தொழில்கள் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பனவாகும்.
- ❖ சைவசித்தாந்தம் சத்காரிய வாதத்தை ஒப்புக்கொள்கின்றது.

(10 புள்ளிகள்)

**ஆ. வினையும் விடுதலையும்**

- ❖ கன்மம் என்பது வினை, செயல் எனவும் பொருள்படும். இது மும்மலங்களில் ஒன்றாகும்.
- ❖ ஆணவத்தின் பிடியிலிருந்து ஆன்மாவை விடுவிப்பதற்காகவே இறைவன் கருவி கரணங்களுடன் கூடிய உடம்பினைத் தந்துள்ளான். ஆன்மாக்கள் எடுக்கும் உடம்புகளுக்குக் காரணமாய் பலவித போகங்களைத் தருவதும் ஆன்மாவை விட்டு நீங்காததாய் மனம், வாக்கு, காயம் என்பவற்றால் ஆற்றப்படுவதும் கன்மமாகிய வினையாகும்.
- ❖ கன்மம் - இன்பம் துன்பம் தரும் புண்ணிய பாவ வடிவானது. சர்வ சங்கார காலத்தில் ஆன்மாக்கள் மாயையில் ஒடுங்கும் போது அவற்றைவிட்டு நீங்காது மாயையில் ஒடுங்கும்.
- ❖ கன்மத்தின் செயல்கள் பின்வருமாறு அமையும்.

  இருத்தல் – இந்திரியவழி செல்லுதல்
  கிடத்தல் – அவ்வழியில் ஓங்கிநிற்றல்
  விடுதல் – முயலுதல்
  இயற்றல் – இதவகிதம் செய்தல்
  பரநிந்தை – பிறர்பழி கூறல்
  மேவல் – பலபிறப்புக்களில் மேவல்

- ❖ கன்மம் மூவகைப்படும் அவை,

  **சஞ்சிதம்**

  முன்னைப் பிறவியில் செய்த வினைகளிலும் இப்பிறவியிற் செய்த வினைகளிலும் அனுபவத்திற்கு வராமல் ஏனைய பிறப்புகளுக்கென எஞ்சிக்கிடக்கும் வினை.

  **பிராரத்தம்**

  ஒருவன் முன்செய்த வினையின் பயனை இப்பிறவியில் அனுபவித்தல். அதனை விதி, ஊழ், தெய்வம், நியதி எனவும் கூறுவர்.

  **ஆகாமியம்**

  பிராரத்த கன்மத்தை அனுபவிக்கும் போது செய்யும் புதிய வினைகள் ஆகாமியம் ஆகும். இந்த ஆகாமியத்திலும் ஒரு பகுதி உடனுக்குடன் அனுபவத்திற்கு வரும்.

- ❖ வினை அனுபவத்திற்கு வரும் போது அதாவது கன்மத்தின் பயன் செய்த முறையிலன்றி மாறியும் வரும். இதனை ஆதிதெய்விகம், ஆதிபௌதிகம், ஆதிஆத்மிகம் என வகுப்பர்.
- ❖ பிறவியெடுத்த ஆன்மா ஆணவத்தின் முனைப்பினாலே வினைகளைப் புரிகின்றது. பொதுவாக நல்வினை – தீவினை என இருவகைப்படும்.
- ❖ ஆணவத்தை அடக்கி ஆன்மாவை ஈடேற்றும் செயல்கள் நல்வினை எனப்படும். ஆணவத்துக்கு அடங்கி ஆன்மாவுக்கு கேடுவிளைவிக்கும் வினைகள் தீவினையாகும்.

- ❖ நல்வினையானது சிவநல்வினை, பசுநல்வினை எனவும் தீவினையானது சிவத்தீவினை, பசுத்தீவினை எனவும் பகுக்கப்படும்.
- ❖ பற்றற்ற வினையும் உள்ளது. இது இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் அடைந்தோர் எல்லாம் அவன் செயலென திருவருள் துணைக்கொண்டு செய்யும் வினை.
- ❖ விடுதலை என்பது முத்திநெறியாகும். ஆன்மாக்கள் முன்செய்த வினைப்பயன்படி பல பிறவிகளை எடுத்து இருவினை புரிவதும் வினைப்பயனை அனுபவிப்பதாய் இருக்கும் போது ஆணவம் மெலிந்து வலிகெட இருவினைகளும் ஒழிய சிவபுண்ணியம் தொடர்பில் திருவருள் குருவாகி வந்து தீட்சை வழங்கி ஆட்கொண்டு முத்தி நெறியில் சேர்க்கும். ஆன்மா வினைகளில் இருந்து விடுதலை பெற சைவசித்தாந்தம் பல வழிகளைக் கூறுகின்றது. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு மார்க்கங்களாகும்.
- ❖ இதன் முதற்படி தீட்சையாகும்.
- ❖ மனிதப்பிறவியெடுத்த ஆன்மா மேற்கொள்ள வேண்டிய ஒழுக்கத்தை இறைபணி நிற்றல் என்பர். அகப்பூசை, புறப்பூசை, மந்திரசெபம், திருக்கோயில் வழிபாடு, அடியார் வழிபாடு, சமூகத்தொண்டு, ஆலயசேவை, திருப்பணிகள் ஆகியன இதனுள் அடங்கும். இவ்வாறு செய்யும் போது ஆன்மாவானது மலங்களாகிய வினைகளில் இருந்து விடுதலை பெற்று பக்குவ நிலையை அடையும். இதனை, இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் எனும் படிநிலைகளாகச் சைவசித்தாந்தம் கூறும்.
- ❖ ஆன்மாவானது, பிறப்பு, இறப்பு எனும் தொடர்ச்சியில் இருந்து விடுபட்டு இறைவனின் திருவடியை அடைந்து இரண்டறக் கலந்து பேரின்பம் அடைதலே முத்தி நிலையாகும்.
- ❖ இறைவன் திருவடியை அடையும் முத்திநிலையை 'தாடலை போற் கூடல்' எனத் திருவருட்பயன் கூறுகின்றது. தாள் + தலை = தாடலை.

கவனத்திற் கொள்க - பொருத்தமான பாடற் சான்றுகள் காட்டியிருப்பின் உரிய புள்ளிகளை வழங்குக.

(10 புள்ளிகள்)

10 + 10 = (20 புள்ளிகள்)

**06.இந்துநாகரிக வரலாற்றில் விஜயநகர நாயக்கர் காலம் பெற்றுள்ள முக்கியத்துவத்தினை ஆராய்க.**

- தென்னிந்தியாவில் கர்நாடக மாநிலத்தில் ஹம்பி எனுமிடத்தில் 1336 இல் விஜயநகரப் பேரரசு நிறுவப்பட்டது.
- முதலாம் புக்கன், கரிகரன், குமாரகர்ணன் என்பவர்கள் விஜயநகரப் பேரரசர்களாக முடி சூடி விஜயநகர ஆதிக்கத்தை வளர்த்தனர்.
- இத்தகைய விஜயநகர ஆட்சி தலைக்கோட்டைப் போரைத் தொடர்ந்து வலுவிழந்தது. அதனைத் தொடர்ந்து விஜயநகர நாயக்க அரசர் மதுரை, தஞ்சை, செஞ்சி, திருமலை ஆகிய இடங்களில் ஆட்சி செய்தனர்.
- விஜயநகர அரசர்களில் முதன்மையானவர் கிருஸ்ணதேவராயர் ( 1505 - 1529 ) இவரைத் தொடர்ந்து அட்சுதராயரும் அதன் பின் இராமராயர் ஆட்சியும் இடம்பெற்றது.
- விஜயநகர அரசர்கள் வைணவத்திற்கு பங்களிப்புச் செய்ததோடு விஜயநகர நாயக்க மன்னராட்சியில் இந்துப் பண்பாடு மறுமலர்ச்சி அடைந்தது.
- விஜயநகர ஆட்சியில் வடமொழி இலக்கியம் வளர்ச்சிக் கண்டது.
- முதலாம் புக்கன் சாயனருக்கு உதவி செய்தான். அவரால் நான்கு வேதங்கள் பிராமணங்கள் என்பவற்றிற்கு உரை எழுதப்பட்டது.
- இராமாயண உரையை ஸ்வரதீட்சிதர் எழுத கிருஸ்ணதேவராயர் உதவினார்.
- கிருஸ்ணதேவராயரின் அரண்மனைப் புலவராகிய சானாவதிமர் மகாபாரதத்திற்கு கிருஸ்ணசந்தம் எனும் உரை எழுதியுள்ளார்.
- விஜயநகர ஆட்சியில் நாடக நூல்களும் எழுந்தன.
- தமிழகத்தை ஆட்சி செய்த நாயக்கர் அவையில் அப்பைய தீட்சிதர் வடமொழி இலக்கியத் துறைக்கு பெரும்பணி ஆற்றினார். சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு இலக்கியங்கள் சிறப்படைந்தன.
- கிருஸ்ணதேவராயர் அமுக்தமால்யதா என்னும் ஆண்டாள் கதையை இயற்றினார்.
- இஸ்லாமியர் இந்து பண்பாட்டை அழித்தனர், இந்துக்களை மதம் மாற்றினர், கோயில்களையும், படிமங்களையும் சிதைத்தனர். இவற்றை எதிர்க்கத் தோன்றிய விஜயநகர ஆட்சியில் சைவமும் வைணவமும் மறுமலர்ச்சி அடையலாயின.
- விஜயநகர அரசர்களுள் ஒருவராகிய கரிகரன், காளகஸ்தி, சிதம்பரம், திருப்பதி, திருவரங்கம் முதலிய கோயில்களில் திருப்பணி செய்தார்.
- விஜயநகர ஆரம்ப கால அரசர்கள் சைவசமயத்தை சேர்ந்தவர்கள், அவர்கள் சங்கரரின் சிருங்கேரி மடத்திற்கு கூடுதல் மானியங்கள் வழங்கினர். மேலும் கிருஷ்ணதேவராயர் போன்ற வைணவ அரசர்கள் சைவ வைணவ ஆலயங்களுக்கு வேறுபாடின்றி தானங்கள் வழங்கினர்.
- சித்தாந்த சைவம், வீர சைவம், காஸ்மீர சைவம் என்பவற்றின் வளர்ச்சி காணப்பட்டது.
- பசவபுராணம், வீரசைவக் கோட்பாட்டைக் கூறும் பிரதான நூல்
- பிரபுலிங்க லீலை, விருபாட்சகர் கோயில், விருபாட்சம் பொறித்தல் என்பன முக்கியமானவை.
- சைவசமய நெறியில் விருபாட்சகர் வழிபாடு பிரதான இடத்தைப் பெற்றது.
- கிருஸ்ணதேவராயரே விஸ்ணுசித்தியம் என்னும் நூலை எழுதியவர். சைவசமயத்தில் காளத்தி மாத்மியம் இவர் காலத்தில் எழுதப்பட்டது. அட்டத்திக்கஜம் என்னும் எட்டுப் புலவர்கள் பிரதானமானவர்கள்.
- வைணவம் வடகலை வைணவம், தென்கலை வைணவம் என விரிவடைந்தது.
- திருவரங்கத்தில் வாழ்ந்த மத்துவர் வேதாந்தத் தத்துவத்தைப் போதித்தார்.
- அருணகிரிநாதரின் பாடல்கள் முருகவழிபாட்டின் பெருமையை எடுத்துக் காட்டுவன.
- காளாமுகர், பாசுபதர் முதலிய சைவசமய பிரிவினர் காணப்பட்டனர்.
- விருப்பாட்சகர் கோயில், விட்டலர் சுவாமி கோயில் என்பன கிருஸ்ணதேவராயர் அமைத்த கோயில்கள் அவற்றில் இராமாயணக் கதைச் சிற்பம், இராஜகோபுரம், கல்யாண மண்டபம், ஆயிரங்கால் மண்டபம், பட்டாபிராமர் கோயில், அம்மன் சன்னிதானம் முதலிய அமைப்புக்கள் காணப்பட்டு இம்மன்னர் காலத்தில் கலை வளர்ச்சி கண்டது.

- ❖ திருப்பாற் கடலை கடைதல், இராமாயண மகாபாரத ஓவியங்கள், இராமாயணக் கதைச் சிற்பங்கள் இடம்பெற்றன.
- ❖ விஜயநகர ஆட்சியைத் தொடர்ந்து நாயக்கர் காலம் எழுந்தது. அவர்கள் வைணவ நெறிக்கு பணியாற்றினர். 17 ஆம் நூற்றாண்டு சிவப்பிரகாசர் பணிகள் குறிப்பிடத்தக்கன. சித்தாந்த சைவ வளர்ச்சி, உமாபதி சிவாச்சாரியார் நூல்கள், ஸ்மார்த்த சைவர், அம்மன், முருகன், விநாயகர் வழிபாடுகள் சிறப்படைந்தன.
- ❖ சைவ இலக்கிய வளர்ச்சி காணப்பட்டது.
- ❖ சித்தாந்த இலக்கியம், தல புராணம், சித்தாந்த பாடல்கள், உரைநூல்கள் என்பன வளர்ச்சி கண்டன.
- ❖ தமிழ் புராண வளர்ச்சி – நாற்பது சைவப் புராணங்கள் எழுந்தன.
- ❖ உமாபதி சிவாச்சாரியார் சிதம்பரக் கோயில் பற்றிப் பாடிய கோயிற் புராணம் குறிப்பிடத்தக்கது.

| | | |
|---|---|---|
| கமலை ஞானப்பிரகாசர் | – | திருவானைக்கா புராணம் |
| நிரம்ப அழகிய தேசிகர் | – | சேது புராணம் |
| எல்லப்ப நாவலர் | – | அருணாசலபுராணம் |
| சிவஞான முனிவர் | – | காஞ்சிப் புராணம் |
| கச்சியப்ப முனியர் | – | தணிகைப் புராணம் |

- ❖ ஆகம உரைகள் இக்காலத்தில் எழுச்சி பெற்றன. சிவதர்மோத்திரம் மறைஞான சம்பந்தரால் ஆகம உரையாக எழுதப்பட்டது.
- ❖ சிவாக்கிரக யோகிகள் – சிவநெறி பிரகாசம் மற்றும் குமரகுருபரர் கந்தர் கலிவெண்பா, மீனாட்சி அம்மன் பிள்ளைத் தமிழ், சகலகலாவல்லிமாலை
- ❖ தாயுமானவ சுவாமி தோத்திரங்கள் முக்கியமானவை.
- ❖ பலகலை இலக்கியங்கள் எழுந்தன.
- ❖ திருகூடராசப்பக் கவிராயரின் திருக்குற்றாலக் குறவஞ்சி கீர்த்தனை வடிவானது, அருணகிரிநாதர் சந்தக் கவிதைகள், திருப்புகழ், கந்தரந்தாதி, கந்தரனுபூதி
- ❖ சைவ ஆதீனங்களும் சைவ சித்தாந்த மரபும் வளர்ச்சி, சைவ சித்தாந்த உரைகள்
- ❖ நால்வர் நான் மணிமாலை
- ❖ இந்துக்கோயில்களும் விழாக்களும் சிறப்படைந்தன. சிதம்பரம், மதுரை, திருவாரூர் கோயில்களில் பௌர்ணமி சித்திரைத் திருவிழா, தெப்பத் திருவிழா, திருவாதிரைத் திருவிழா என்பவை இந்துப் பண்பாட்டுக்கு வளம் சேர்த்தன.
- ❖ இவ்வாறாக விஜயநகர நாயக்கர் காலத்தில் இந்து நாகரிகம் வளரச்சி பெற்று அம்மன்னர் காலம் முக்கியத்துவம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(20 புள்ளிகள்)

**07. நவீன சீர்திருத்த சிந்தனையாளர் வரிசையில் இராஜாராம் மோகன்ராய் ஆற்றிய பணிகளின் முக்கியத்துவத்தினை மதிப்பிடுக.**

- ❖ இந்தியாவில் ஐரோப்பியப் பண்பாடு, கிறிஸ்தவ கலாசாரம் ஆகியன செல்வாக்குப் பெற்ற காலத்தில் இந்து சமூகக் குறைபாடுகளைக் களையுமுகமாக இந்து சமய சீர்திருத்த இயக்கங்கள் தோற்றம் பெற்றன.
- ❖ 19ஆம் நூற்றாண்டின் நவீன இந்துமத சீர்திருத்த வாதிகளில் இராஜாராம் மோகன்ராய் முக்கியத்துவம் பெறுபவர். தமது அரிய பணிகளால் சாதனை படைத்தவர்.
- ❖ இவர் கி.பி 1772 ஆம் ஆண்டு வங்காள நாட்டில் பிறந்தவர். பிராமண குலத்தவர். பிராமணியக் கொள்கைகளைச் சீர்திருத்த முயன்று பிரம்ம சூத்திர நூலுக்கு உரை செய்து ஒரு கடவுட் கோட்பாட்டைப் பரப்பியவர்.
- ❖ பலமதக் கோட்பாடுகளையும் பல மொழிகளையும் கற்றுப் புலமை பெற்ற வகையில் சமூகக் குறைபாடுகளை இனங்கண்டு அவற்றை நீக்குவதன் மூலம் இந்து சமூகத்தைப் பாதுகாப்பதில் அரிய பங்களிப்புச் செய்தவர்.
- ❖ இவர் பல சமயங்களின் ஆய்வாளர். இந்தியாவின் புதுயுகத் தந்தையாக மிளிர்ந்தவர். பகுத்தறிவு வாதத்தின் முன்னோடி. சமூக சீர்திருத்தவாதியாகவும் முதன்மை பெற்றவர்.
- ❖ சமுதாயத்திலுள்ள மூட நம்பிக்கைகள், குறிப்பாக பால்ய விவாகம், தீய பழக்கங்கள் முதலியவற்றுக்கு எதிராகச் சட்டங்களை அரசாங்கங்கள் நிறைவேற்றுவதற்குப் பாடுபட்டவர்.
- ❖ சமயப் பெருநெறிகளிடையே சமரசத்தைக் கண்டவர். பிரசாரம் செய்து ஆதரவு வழங்கியவர்.
- ❖ மரபுவழி இந்துநெறியைப் பேணியதோடு ஆன்மிக வளர்ச்சிக்கும் அறிவியல் சிந்தனைக்கும் நல்லாதரவு நல்கியவர். அவற்றைப் பரப்புவதே அவரது பணியாகக் கொண்டவர்.
- ❖ தம் குடும்பத்திலேயே உடன்கட்டை ஏறும் வழக்கத்தைக் கண்ணுற்று அதனைச் சதி என்னும் சட்டத்தின் மூலம் தடுத்து நிறுத்தியவர்.
- ❖ 1815ஆம் ஆண்டு ஆத்மிகசபை அமைப்பு.
- ❖ வேதாந்தக் கொள்கைக்கு முக்கியத்துவம் கொடுத்தவர். நவீன முறைக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்தவர்.
- ❖ உபநிடதச் சிந்தனைகளே இந்துசமயத்திற்கு அடிப்படையானவை என்பதனை ஏற்றுக்கொண்ட இராஜாராம் மோகன்ராய் உருவ வழிபாடு, கிரியைநெறி என்பவற்றில் ஈடுபாடு கொள்ளவில்லை.
- ❖ சமூக சமத்துவமே சமூக மேம்பாட்டுக்குரிய வழி என்பதனைப் போதனைகளாலும் தமது சமரசத்தின் சாதனையாலும் காட்டியவர்.
- ❖ "அவர் ஒருவரே உண்மை, எல்லோரும் வாருங்கள்" என்று சமய ஒருமைப்பாட்டையும் சமூக ஒருமைப்பாட்டையும் இணைத்தவர்.
- ❖ இவரது சமாஜத்தில் பல்வேறு சமயத்தவரும் வழிபாட்டில் ஈடுபட்டனர். இது அவரது வர்ண தர்மம் கடந்த வாழ்வியற் கோட்பாட்டை எடுத்துக் காட்டுகின்றது.
- ❖ பெண்ணுரிமையினைப் பாதுகாத்து இந்து தர்மத்தை இங்கிலாந்து வரை பரப்பிய பெருமை இவருக்குரியது.
- ❖ ஆத்மிக சபை ஸ்தாபித்தமை, வேதாந்த சூத்திர மொழிபெயர்ப்பு, வேதாந்தக் கல்வியைப் பரப்பியமை, பிராமணன் என்ற சஞ்சிகை வெளியீடு, பல்வகைப் பிரார்த்தனை வழிபாடுகளை அறிமுகம் செய்தமை அவரது பணிகளில் முக்கியத்துவம் பெறுவதை நாம் சிறப்பாக அவதானிக்கலாம்.
- ❖ பிரமசமாஜத்தை அமைத்தமை, உடன்கட்டை ஏறும் பழக்கத்தைச் சட்டத்தின் மூலம் தடைசெய்ய உழைத்தமை என்பன இவரது முக்கிய பணிகளாக அமைந்ததை அறிஞர்கள் சிறப்பாகக் கூறியுள்ளனர்.
- ❖ இவற்றின் வழி இந்து சமூகத்தை நெறிப்படுத்திய சாதனையாளர் என்ற நிலைக்கு உயர்வடையச் செய்தமை அவரது பணிகளின் முக்கியத்துவமுடையவை.
- ❖ அவரது பணிகளையும் கொள்கைகளையும் மதிப்பீடு செய்யுமிடத்து 'நவீன இந்துமத சீர்திருத்தவாதி' என்ற நிலையில் அவர் ஒரு சாதனையாளராகவும் தீர்க்கதரிசியாகவும் விளங்கியவர் என்பது நன்கு புலனாகின்றது.

(20 புள்ளிகள்)

**08. இந்துக்களின் வாழ்வியல் நடைமுறைகளில் வானியலும் சோதிடமும் பெற்று வந்துள்ள முக்கியத்துவத்தை இனங்கண்டு விளக்குக.**

- ❖ இந்துக்களின் வாழ்வியல் நடைமுறைகளில் ஆரம்ப காலத்திலிருந்தே வானியலும் சோதிடமும் முக்கியத்துவம் பெற்று வந்துள்ளன.
- ❖ வானியலை அடிப்படையாகக் கொண்டே சோதிடக்கலை தோற்றம் பெற்றதனால் இவை இரண்டும் இணைந்து செயற்படுபவையாக உள்ளன.
- ❖ வானியல், சோதிடம் பற்றிய சிந்தனைகள் மக்கள் வாழ்வை வளப்படுத்துவதாகவும் உள்ளன.
- ❖ வேத இலக்கியங்களின் துணை நூலான வேதாங்கங்கள் ஆறினுள் சோதிடமும் ஒன்றாகும்.
- ❖ சோதிட சாஸ்திரம் என்பது வேள்வி நிகழ்த்துவதற்கேற்ற நாளையும் நேரத்தையும் குறிப்பிடுவதையே நோக்காகக் கொண்ட பண்டைய வானியலை உள்ளடக்கியதாகும்.
- ❖ பண்டைய இந்தியர்கள் வானியல் தொடர்பான அறிவில் சிறந்த புலமையுடையோராய் விளங்கினர்.
- ❖ இந்திய வானியல் வரலாறு மிகவும் பரந்தது என்பது அறிஞர் கருத்து.
- ❖ வானியல் தொடர்பான அறிவியல் சிந்தனைகள் வேதகால மக்களிடையே காணப்பட்டுள்ளன.
- ❖ மண், விண், இடைவெளி பற்றி ஆராயப்பட்டுள்ளன, சூரிய சந்திரர் பற்றி அறியப்பட்டுள்ளன.
- ❖ நாள், சந்திரமாதம், சூரியவருடம் பற்றிய குறிப்புகள் உள்ளன. சூரியனது போக்குப் பற்றிய குறிப்பு உள்ளது. ஐந்து முதல் ஆறு காலங்கள் பற்றியும் 12 மாதங்கள் பற்றியும் 27 நட்சத்திரங்கள் பற்றியும் சில கிரகங்கள் பற்றியும் குறிப்புகளும் உள்ளன.
- ❖ அதர்வ வேதத்தில் சோதிடத்தின் தொடக்கமுள்ளது.
- ❖ மகாபாரதத்தில் யுகங்கள், மாதங்கள், ருதுக்கள் பற்றிய குறிப்புகள் உள.
- ❖ கி.மு 500 - கி.பி 500 காலப்பகுதிக்குரிய வானியல் கோட்பாடு முக்கியத்துவம் உடையது.
  1. பிதாமஹ கோட்பாடு - வருடம் 365 நாட்களைக் கொண்டது
  2. புளிக்ஷ கோட்பாடு - நீள்வட்டப் பாதை பற்றிய விபரம், நட்சத்திரங்களின் தோற்றம்
  3. சூரியக் கோட்பாடு - கிரகங்களின் அசைவுக் கணிப்பு
- ❖ பண்டைய வானியல் முறைகள் யாவற்றையும் இந்திய வானியலாளர்கள் தொலைநோக்கி இன்றியே நுட்பமாக அவதானித்துள்ளனர். அவற்றை அளவீடு செய்தனர்.
- ❖ இவர்கள் தம் அளவீடுகளுடே ஞாயிறு, திங்கள், புதன், வெள்ளி, செவ்வாய், வியாழன், சனி ஆகிய ஏழு கிரகங்களையே ஆரம்பத்தில் அறிந்திருந்தனர்.
- ❖ பின் இராகு, கேது ஆகிய கிரகங்களையும் சேர்த்துக் கொண்டனர்.
- ❖ முதலாம் ஆரியப்பட்டர், வராகமிஹிரர், பிரம்மகுப்தர் ஆகிய மூவரும் புராதன இந்து வானியற் புலமை மரபின் பிதாமகர்கள் எனப் போற்றப்படுகின்றனர்.
- ❖ இத்தகைய வானியல் புலமைத்துவத்தின் பின்னணியில் சோதிடம் இந்துக்களின் வாழ்வியலில் முக்கியத்துவம் பெற்று வருகின்றது.
- ❖ சோதிடம் என்பது இந்துக்கள் தமது வாழ்வியல் சிறக்க மேற்கொள்ளும் கர்மானுஷ்டானங்களை மேற்கொள்வதற்கேற்ற நாள், கோள் முதலிய கால விசேடங்களைக் கணித்துக் கூறுவதாகும்.
- ❖ இந்து வானியலும் சோதிடமும் மக்கள் வாழ்வில் இணைந்து செயற்படும் அறிவியல் சார்ந்த சிந்தனைப் புலங்களாகும்.
- ❖ யசுர் வேதத்தில் யாகங்களில் நாள், கோள் குறித்தமை பற்றிய சிந்தனைகள் சோதிடம் இந்துக்கள் வாழ்வியலில் பெற்றிருந்த செல்வாக்கைப் பிரதிபலிக்கின்றது.
- ❖ புராதன இந்து வானியலாளர் பெற்றிருந்த வானசாஸ்திரமும் கணிதப் புலமையும் பஞ்சாங்கங்களைக் கணித்து சோதிடத்தை விருத்தி செய்ய உதவின.

Downloaded from Past Papers Wiki - Extensive collection of Past papers, Notes and much more!

- ❖ இன்றுவரை இந்துக்கள் தமது வாழ்வியலில் நிகழும் சமய நிகழ்வுகளுக்குரிய நாள், நட்சத்திரம், யோகம், கரணம் போன்றவற்றின் நிலைகளை அறிந்து செயற்பட பஞ்சாங்கங்கள் கைநூலாக விளங்கி வருகின்றன.
- ❖ இந்துக்களின் இல்லறக் கிரியைகளின் போதும் ஆலயங்களில் நிகழும் நைமித்தியக் கிரியைகளின் போதும் பூர்வாங்கமாக இடம்பெறும் சங்கற்பம் இந்துக்களின் வாழ்வியலில் வானியலும் சோதிடமும் பெற்று வந்துள்ள முக்கியத்துவத்திற்குச் சிறந்த உதாரணமாகும்.
- ❖ யுகம், வருடம், உத்தராயணம், தட்சிணாயணம், மாதம், ருது, நாள், வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம், சுபநேரம் ஆகியன சங்கற்பத்தில் இடம்பெறுகின்றன. விலக்கத்தக்க நாட்கள், இராகுகாலம், சுபநேரம், விரதநாட்கள், சிரார்த்த திதி ஆகிய விபரங்களை இந்துக்கள் தமது வாழ்நாளில் அறிந்து செயற்பட பஞ்சாங்கங்கள் உதவி வருவதோடு சோதிடக்கலை வளம்பெறவும் உதவி வருகின்றன. மற்றும் வாழ்நாளில் இடம்பெறும் சுபமுகூர்த்தம், நெல் விதைத்தல், வித்தியாசாலை ஆரம்பம், பிரயாணம், வீடுகட்டுதல், சீமந்தம், நிச்சயதார்த்தம், கிருகப்பிரவேசம் போன்றவற்றிற்குரிய சுபதினத்தை அறிய பஞ்சாங்கங்கள் உறுதுணையாக உள்ளமை குறிப்பிடற்பாலது. ஜனனக் கணிப்பிற்கும் உதவுகின்றது.
- ❖ இவ்வாறாக இந்துக்களின் வாழ்வியல் நடைமுறைகளில் சோதிடமும் வானியலும் இணைந்து அவர்களது வாழ்வு மங்கலமாக அமைய உதவி வருகின்றமை சிறப்பம்சமாகும்.

(20 புள்ளிகள்)

PAST PAPERS WIKI

(34) WWW.PastPapers.WiKi (34)




2024 A/L Tamil Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO




2024 A/L Political Science Past Paper Book (Tamil Medium)
රු 1,200.00
or 3 X රු 400.00 with KOKO




2024 A/L Islamic Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO




2024 A/L Islamic Civilization Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO




2024 A/L Geography Past Paper Book (Tamil Medium)
රු 1,000.00
or 3 X රු 333.33 with KOKO




2024 A/L Art Past Paper Book (Tamil Medium)
රු 500.00
or 3 X රු 166.67 with KOKO




2024 A/L SFT Past Paper Book (Tamil Medium)
රු 800.00
or 3 X රු 266.67 with KOKO




2024 A/L ICT Past Paper Book (Tamil Medium)
රු 900.00
or 3 X රු 300.00 with KOKO




2024 A/L ET Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO




2024 A/L BST Past Paper Book (Tamil Medium)
රු 800.00
or 3 X රු 266.67 with KOKO




2024 A/L Agricultural Science Past Paper Book (Tamil Medium)
රු 1,100.00
or 3 X රු 366.67 with KOKO




2024 A/L Common General Test Past Paper Book (Tamil Medium)
රු 600.00
or 3 X රු 200.00 with KOKO




2024 A/L Business Studies Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO




2024 A/L Accounting Past Paper Book (Tamil Medium)
රු 1,000.00
or 3 X රු 333.33 with KOKO




2024 A/L Economics Past Paper Book (Tamil Medium)
රු 900.00
or 3 X රු 300.00 with KOKO




2024 A/L Chemistry Past Paper Book (Tamil Medium)
රු 1,000.00
or 3 X රු 333.33 with KOKO




2024 A/L Biology Past Paper Book (Tamil Medium)
රු 750.00
or 3 X රු 250.00 with KOKO




2024 A/L Physics Past Paper Book(Tamil Medium)
රු 1,050.00
or 3 X රු 350.00 with KOKO


**LOL STORE PVT LTD** Copyright ©2023

We Using Safe Payment For
Easy Monthly Installments
KOKO
CASH ON DELIVERY
VISA